**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ம் நாள் செவ்வாய்கிழமை

**<u>இ.ம.எண்.8/2025 இன் அ.வ.எண்.132/2019</u>**

திருநெல்வேலி மாவட்டம், சங்கர்நகர் வழி, தென்கலம் அஞ்சல், பெரியார் நகர், கதவு எண்.133 ல் வசித்து வரும் காசிவேல் அவர்கள் மனைவி, இந்து, வயது 52 உள்ள லெட்சுமி.

.... மனுதாரர்/வாதி

/எதிர்/

திருநெல்வேலி மாவட்டம், சங்கர்நகர் வழி, தென்கலம் அஞ்சல், பெரியார் நகர் என்ற முகவரியில் வசித்து வரும் பெருமாள் அவர்கள் குமாரர், இந்து, வயது 52 உள்ள பால்ராஜ்.

.... எதிர்மனுதாரர்/
பிரதிவாதி

இந்த மனுவானது, மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சியமாக சர்வேயர், வட்ட சார் ஆய்வாளர் (நில அளவையர்) மானூர் அவர்களை சாட்சியாக விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் பிரிவு 151ன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு தாக்கல் நாள் 10.07.2025

இந்த மனுவானது 20.08.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சிவசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மாரிமுத்து அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு

வாதங்களைக் கேட்டும், மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவாணை**

| | |
|---|---|
| 1). | இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது. |
| 2). | செலவு தொகை இல்லை. |

( இரு தரப்பிலும் செலவு விபர பட்டியல் தாக்கல் இல்லை)

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02 ம் நாள் இந்நீதிமன்ற முத்திரையும் என்னுடைய கையொப்பமும் இடப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Decree uploaded on 17.09.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.09.17 14:50:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

மு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.ம.எண்.8/2025
இன்
அ.வ.எண்.132/2019
உத்தரவாணை
நாள் –02.09.2025.